வெளியீடு 01 ■ இதழ் 09 ■ மார்ச் 2009



சணல் பொருட்கள்.....2



லேப்டாப் (Laptop) கம்ப்யூட்டர்கள் - சில யோசனைகள ..........3



உத்தரவுப் பத்திரங்களும் சான்றிதழ்களும் .........4

# மனிதாபிமானம்

மனித நேயத்திற்காக ஒன்றுபடுவோம்

அம்பாறை மாவட்ட – அக்கரைப்பற்றில்

## மட்பாண்ட உற்பத்தியின் வளர்ச்சி

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் மட்பாண்ட வேலையை பரம்பரை தொழிலாக தங்களது வீடுகளில், செய்து வந்த மக்களுக்காக, 1950ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் முதன்முறையாக RDOவினால் 32 அங்கத்தவர்களைக் கொண்ட**"ஐக்கிய நாணய மட்பாண்ட நிலையம்"** எனும் பெயரில் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இதில் உள்ள 32 அங்கத்தவர்களுக்கும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதற்கான பயிற்சியை முதன்முதலில் வழங்கி செயற்படுத்தியவர் ஆசிரியர் எதிர்நாயகம் அமிர்தவல்லி அவர்களாவார்.



இவ் அமைப்பினை நிரந்தரமாக இயங்கவைக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகரெட்ணம் அவர்களால் 1950ம் ஆண்டு ஆலையடிவேம்பு பிரதேசத்தில் ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு அதற்கான திறப்பு விழாவும் நடாத்தப்பட்டது. அத்தோடு அரசாங்க உதவிகளும் வழங்கப்பட்டன. மேலும் பல்வேறு ஆசிரியர்களின் பயிற்றுவிப்பால் தனித்து இயங்குமளவுக்கு பாரிய வளர்ச்சியடைந்து. இவ்வமைப்பின் இறுதி ஆசிரியராக தங்கம்மா அவர்கள் கடமையாற்றினார். சரியாக வழிநடத்துவதற்கோ உதவிகளை வழங்குவதற்கோ எவரும் முன்வராததால் இச் சங்கம் படிப்படியாக நலிவடைந்து போனது. இதனால் மட்பாண்ட வேலையை செய்த அங்கத்தவர்கள் அனைவரும் அவரவர் வீட்டில் பொருட்களை செய்து தனித்தனியாக விற்பனை செய்துவந்தனர். இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். குறிப்பாக



- பொருட்களின் விலை ஒருவருக்கொருவர் வேறுபட்டது
- முற்பணம் வாங்கி வியாபாரம் செய்யும் நிலையேற்பட்டது
- சிலர் தரம் அற்ற பொருட்களை உற்பத்தி செய்தனர்.

எமது பிரதேசத்தில் மட்பாண்ட வேலையை சுமார் 100க்கு மேற்பட்டவர்கள் பரம்பரைத் தொழிலாக செய்கின்றனர் எனினும் இவர்களுக்கென ஒரு சங்கமோ அல்லது,அமைப்போ தற்பபொழுது இல்லை. அத்தோடு அரசாங்கத்தினாலோ நிறுவனங்களாலோ எந்தவித உதவியும் கிடைப்பதுமில்லை..

இக்காலகட்டத்தில் CIDA திட்டத்தின் நிதி உதவியுடன் CHA நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் எமக்கு உதவி செய்ய முன் வந்தது. மட்பாண்ட தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களான 30 பெயரை தெரிவு செய்து வியாபார அபிவிருத்தி பயிற்சிகளை வழங்கியதோடு, தொழிலை விருத்தி செய்வதற்கான மூலப்பொருட்களையும் மானியமாக வழங்கியது. இப்பயனாளிகளுள் நானும் ஒருவராகும். இவற்றைக்கொண்டு படிப்படியாக எமது தொழிலை விருத்திசெய்யத் தொடங்கினோம். தற்போது தரம்வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் வியாபார மட்டத்தில் வருமானத்தை அதிகரித்துக் கொண்டோம்.மேலும் பல புதிய தொழிநுட்ப பயிற்சிகளை வழங்கியதுடன், மட்பாண்டப் பொருட்கள் செய்வதற்கான சக்கரங்கள், அச்சுவகைகள் ஆகியனவற்றையும் வழங்கி, வியாபாரத்தினை மேன்படுத்துவதற்காக விற்பனை நிலையம் ஒன்றினையும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர் இவ்வாறான உதவிகளை அடிப்படையாக கொண்டு நாங்கள் மீண்டும் ஒரு புத்துயிர் பெற்ற புதிய அமைப்பாக பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

இவ்வுதவிகளுக்காக CHA நிறுவனத்துக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

தகவல் : -CHA, அம்பாறை.

# சணல் பொருட்கள்





தங்க நூல் என்று அழைக்கப்படும் சணல் நூல்களை பாரம்பரியமாக வங்காளத்தைச் சேர்ந்த பெண்கள் செய்து வருகின்றனர். இவர்கள் சணல் கொண்டு வீட்டு உபயோகப்பொருட்கள், பைகள் உள்ளிட்டவைகளைச் செய்து வருகின்றனர். பழங்காலத்து வங்காள மக்கள் சணலினைக் கொண்டு ஆடைகள் தயாரித்து உடுத்தி வந்திருக்கின்றனர். இன்று வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் சணல் நூல் தயாரிப்பது மட்டுமன்றி சணல் கொண்டு தரை விரிப்புகள், அலங்காரப்பொருட்கள், தோட்ட அலங்காரத் தொட்டிகள், அலங்காரக் கைப்பைகள், மெத்தை விரிப்புகள் உள்ளிட்ட பல பொருட்களை தயார் செய்து வருகின்றனர்.

சணலினை ஆங்கிலத்தில் ஜூட் என்று அழைக்கின்றனர். இந்தப் பெயர் ஒரிய வார்த்தையான ஜூட்டாவில் இருந்து ஆங்கிலத்திற்குச் சென்றிருக்கின்றது. ஜூட் காய்களில் இருந்து வரும் நார்களில் இருந்து சணல் தயாரிக்கப்படுகின்றன. ஜூட் தாவரம் தாவரவியல் மொழியில் விளக்கவேண்டும் என்றால் அவை **மால்வே சியே** குடும்பத்தைச் சேர்ந்தவை. கார்காரஸ் இனத்தைச் சேர்ந்தவை பருத்திக்கு அடுத்த படியாக உபயோகரமான நூலாக சணல் பார்க்கப்படுகிறது. சணல் இந்தியா, பர்மா, எல்லைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. சணல் பயிர் மூலம் நூல் எடுக்கும் வித்தை முந்தைய காலங்களில் வங்காளப்பகுதியில் தோன்றியது. சணல் பயிர் வங்க தேசம் இந்தியா மியன்மர் நேபால் சீனா தைவான் தாய்லாந்து வியட்னாம் கம்போடியா பிரேசில் ஆகிய நாடுகளில் விளைகின்றது. இந்தியாவின் பழங்கால தொழில்களில் சணல் நூற்கும் தொழிலும் ஒன்றாகும். இன்று இந்தத் தொழிலுக்கு உலக நாடுகள் பலவற்றிலும் நல்ல வரவேற்புக்கிடைக்கின்றது.

சணல் பயிர் மண்வளத்தைக் காப்பதாக இருப்பதால் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், தொழில் அதிபர்களும், சணல் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் சணல் எளிதில் மக்கிப்போகும் தன்மை கொண்டதால் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது. பருத்தியைக் காட்டிலும் மலிவானதாக சணல் இருப்பது அதன் தேவையை அதிகரித்துள்ளது. சணலில் இரண்டு வகைகள் இருக்கின்றன. அதில் டோஸா ஜூட் என்பது தங்க நிறம் கொண்டதாகவும், ஒயிட் ஜூட் என்பது வெளிர் நிறம் கொண்டதாகவும் இருக்கும். உலகிலேயே அதிகமாக வங்காள விளை நிலங்களில் தான் சணல் தயார்க்கப்படுகின்றது. சணல் நாரிலிருந்து பிரிக்கப்பட்டதும் அதன் நிறம் மற்றும் அதன் நீளத்திற்கு ஏற்ப அதன் விலை நிர்ணயிக்கப்படுகின்றது. பெரும்பாலும்பிரித் தெடுக்கப்படும் நார் ஒன்று முதல் நான்கு மீற்றர் நீளமுடையதாக இருக்கும். பிறகு அந்த நார் பலவிதமான பதப்படுத்தும் முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு சணல் நூலாகத் தயாரிக்கப்படுகின்றது.

நல்ல தரமான சணல் நூல் பார்ப்பதற்குத் பட்டின் அளவு பளபளப்பைத்தருகின்றன.சணல் மூலம் சாக்குகள், தரை விரிப்புகள், பைகள், துணிகள், கைவினைப்பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள், குஷன் கவர்கள்,மேசை விரிப்புகள், சுவர் அலங்காரப்பொருட்கள், தயாரிக்கப்படுகின்றன. இது தவிர சணலினை காலணிகள் தயாரிக்கும் துறையினரும் பயன்படுத்துகிறார்கள். இதன் மூலம் நல்ல தரமான செருப்புகள், ஷூக்கள் செய்யப்படுகின்றன. சணல் மூலம் செய்யப்படும் காலணிகள் விலை குறைவாக இருப்பதால் எளிய மக்களுக்குப்பெரும் உதவியாக இருக்கின்றன.

அடுத்ததாக சணல் அதிகமாகப்பயன்படும் துறை கைவினைக் காகிதங்கள். சணலினைக் கூழாக்கி அதன் மூலம் காகிதம் செய்கின்றனர். இவ்வாறு செய்யப்படும் காகிதம் கனமானதாக இருப்பதால் அதிக எடை தாங்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் கைவினைக்காகிதங்கள்

அதிகப்படியாக பைகள், /போல்டர்கள் போன்ற பொருட்கள் செய்ய உதவுகின்றன. சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானதாக இருப்பதால் சணலினை சிண்தடிப் பொருட்களுக்கு மாற்றாக உபயோகிக்கும் வழக்கம் பெருகி வருகின்றது. இவற்றின் விலை மலிவாக இருப்பதால் மக்களுக்கு பயன்படும் விதமாக உள்ளது.

வங்காளத்தின் மேற்கு தினாஜ்பூர் பகுதியைச் சேர்ந்த களியகன்ச் எனும் பகுதியில் இருக்கும் 50 ற்கும் மேற்பட்ட கிராமங்களில் சணல் நூற்கும் பணி மற்றும் சாயம் ஏற்றும்பணி நடந்து வருகின்றது. உலக மக்கள் மீண்டும் இயற்கையின் உதவியை நாடத் துவங்கியுள்ளனர்.

தகவல் : **DRC Unit, CHA** , மன்னார்.

# லேப்டாப் (Laptop) கம்ப்யூட்டர்கள் - சில யோசனைகள்



நாள்தோறும் லேப்டாப் கம்ப்யூட்டர்களின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உயர்கல்வி மாணவர்கள் அனைவரும் லேப்டாப் கம்ப்யூட்டர் தங்களுக்கு ஒரு அத்தியாவசியத் தேவை என உணரத் தொடங்கி விட்டனர். அதே போல பல இடங்களுக்குச் சென்று, வர்த்தகம் மேற்கொள்பவர்களும் அலுவல் ரீதியாகப் பணியாற்றுபவர்களும் லேப்டாப் கம்ப்யூட்டரைத் தங்கள் மொபைல் அலுவலகமாகவே தூக்கிச் செல்கின்றனர்.

டெஸ்க் டாப் கம்ப்யூட்டரின் சூழ்நிலைக்கும் லேப்டாப் பயன்படும் சூழ்நிலைக்கும் பலத்த வித்தியாசம் உள்ளது. பயன்படுத்தப்படும் வகையிலும் வேறுபாடான நிலைகள் உள்ளன. இவற்றின் அடிப்படையில் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இங்கே காணலாம்.

1. எந்த அளவிற்கு வெப்பம் வெளிவருகிறதோ அந்த அளவிற்கு லேப்டாப்பின் ஏதேனும் ஒரு பகுதி பிரச்சனை கொடுக்கலாம். லேப்டாப்பை தொடர்ந்து மெத்தையில் வைத்தோ அல்லது தலையணையில் வைத்தோ பயன்படுத்தி வந்தால் கம்ப்யூட்டரிலிருந்து வெப்பம் வெளியாவதற்குத் தரப்பட்டிருக்கும் துளைகளை மூடிவிடுகிறோம். இதனால் வெப்பம் வெளியேறும் வாய்ப்பின்றி உள்ளே இயங்கும் உறுப்புக்கள் பழுதடைந்துவிடும் வாய்ப்புகள் உள்ளன.

டெஸ்க் டாப் கம்ப்யூட்டரில் (Desktop computer) உள்ளது போல கேபின் உள்ளே பேன்களைச் சுழலவிட்டு உள்ளிருக்கும் வெப்பத்தை வெளியேற்ற முடியாது. எனவே வெளியே இருந்தவாறே இயங்கும் சிறிய பேன்கள் லேப் டாப் கம்ப்யூட்டருக் கென்றே கிடைக்கின்றன. இவற்றை வாங்கி இணைத்துப் பயன் படுத்தலாம். இவற்றை பெரும்பாலும் யு.எஸ்.பி.(USB) யில் இணைத்து இயக்கலாம். லேப்டாப்பில் எங்கெல்லாம் வெப்பம் வெளிவரத் துளைகள் உள்ளனவோ தூசியை வெளியேற்ற வேண்டும்.

2. எந்த கம்ப்யூட்டரிலும் (Hard disk) டிஸ்க் தான் நம்மை உற்சாகப்படுத்தும் அல்லது ஒரேயடியாக வெட்டிச் சாய்க்கும் சாதனமாகும். சிறிய பிளாட்டர்கள், ரீட்/ரைட் ஹெட்கள் மற்றும் அதனுள்ளே அமைந்திருக்கும் நகரும் சிறிய உறுப்புகள் ஆகியவை நம் இதய இயக்கத்திற்கு ஒத்ததாகும். ஏதேனும் பலத்த அதிர்ச்சி, தட் என்று லேப்டாப்பை மெத்தையின் மீது போடுவது போன்ற செயல்கள் இவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி இயக்கத்தை நிறுத்தலாம்.

இதன் இயக்கத்தில் ஏற்படும் வெப்பமும் வெளி யேற்றப்பட வேண்டும். ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. அண்மைக் காலத்தில் சாலிட் ஸ்டேட் (Solid-state drive) எனப்படும் ஹார் ட் டிஸ்க்குகள் வெளிவந்து பயன்படுத்தப்படுகின்றன. இந்த டிரைவ்களில் நகரும் உறுப்புகள் இல்லை. பிளாஷ் மெமரி பயன்படுகிறது. எனவே மிக மிகக் குறைந்த அளவிலே தான் வெப்பம் வெளிப்படுகிறது. மேலும் இவை அதிர்ச்சி, அதிக பட்ச சீதோஷ்ண நிலை ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. தற்போது இவற்றின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் விரைவில் விலை குறையும் என எதிர்பார்க்கலாம். அப்போது இவற்றையே ஹார்ட் டிரைவாக வாங்கிப் பயன்படுத்துவது நல்லது.

3. வேலை பார்த்தபின் அலுவலகத்திலிருந்து லேப் டாப்புடன் வருகிறீர்கள். படுக்கை அறையில் உள்ள மெத்தையில் பொத்தென்று அதனை வைக்கிறீர்கள். அது சிறிது மேலே எழும்பி கீழே விழுகிறது. அதன் பின் “அய்யோ அம்மா” என்று கத்தி என்ன பிரயோஜனம்? லேப்டாப் கம்ப்யூட்டரை எப்போதும் முட்டைகள் அடங்கிய பையைக் கொண்டு வருவது போல் கொண்டு வர வேண்டும். எனவே லேப்டாப் நிறுவனம் தந்துள்ள பையை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதையும் கவனமாக மெதுவாகப் பயன்படுத்த வேண்டும். அல்லது அதைக் காட்டிலும் கூடுதல் பாதுகாப்பு தரும் பை ஒன்றைப் பயன்படுத்தலாம்.

பை இல்லாமல் லேப் டாப்பைத் தூக்கிக் கொண்டு வருகையில் அதன் மீது அழுத்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும். ஒரு சிலர் பையின் உள்ளே உள்ள சிறிய அறைகளில் பைல்கள், தாள்கள், பேனாக்கள், மொபைல் போன் சார்ஜர்கள் என இன்றைய காலத்தில் எப்போதும் தேவைப்படும் சில சாதனங்களை திணித்து எடுத்து வருவார்கள். இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

4. பேட்டரிகள் (Battery) ஒரு காலத்தில் தன் சக்தியை (power) இழந்துவிடும் என்பதுவும் உறுதியே. எனவே பயன்படுத்த பயன்படுத்த இவை ஒரு காலத்தில் மொத்தமாகத் தன் திறனை இழக்கும். பல்வேறு கணக்கீடுகளின்படி சராசரியாக ஒரு பேட்டரி அதிக பட்சம் 500 முறை சார்ஜ் செய்திடும் வரையே சரியாகச் செயல்படுகிறது. 18 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை வரலாம். அதன்பின் வேறு பேட்டரிதான் போட வேண்டும். பேட்டரியின் சக்தியில் லேப் டாப்பினைப் பயன்படுத்துகையில் லோ பேட்டரி சிக்னல்(signal) வரை பயன்படுத்தி பின்னர் சார்ஜ் (charge) செய்திடவும். எப்போதும் பேட்டரியிலிருந்து இது போன்ற சிக்னல் வருகையில் சார்ஜ் செய்வதே நல்லது.

5. லேப் டாப்பினை ஸ்டேண்ட் பை நிலையில் வைக்க வேண்டாம். இந்த நிலையிலும் பேட்டரியின் சக்தி பயன்படுத்தப்பட்டுக்கொண்டே இருக்கும். இதற்குப் பதிலாக லேப்டாப்பினை ஷட் டவுண் (shut down)செய்து பின் மீண்டும் இயக்கலாம்.

**தகவல் :**
**http://honey-tamil.blogspot.com/2009/03/blog-post_01.html**

# உத்தரவுப் பத்திரங்களும் சான்றிதழ்களும்

| உரிய சட்டம் | தொடர்பு இணையங்கள் |
|---|---|
| 58ஆம் இலக்க 1979ஆம் ஆண்டு வியசாய சேவைகள் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1979Y0V0C58A&hword="&path=2 |
| 29ஆம் இலக்க 1939அம் ஆண்டு விவசாய உற்பத்தி பொருட்கள் ஒழுங்கமைக்கும் சட்டம் (விவசாய நுகர்வு பொருட்கள் இறக்குமதி பற்றிய ஒழுங்கு விதிகள்) | http://www.commonlii.org/lk/legis/consol_act/ap197415.pdf |
| 33ஆம் இலக்க 1961ஆம் ஆண்டு 17ஆம் இலக்க 1964ஆம் ஆண்டு விவசாய உற்பத்தி பொருட்கள் (உத்தரவாத விலைலளும் தானியங்களும் குத்துதல், அரைத்தல்) | http://www.lawnet.lk/process.php?st=1961Y0V0C33A&hword="&path=2 |
| 28ஆம் இலக்க 1941ஆம் ஆண்டு விவசாய உற்பத்தி முகவர்கள் (பதிவு) கட்டளைச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y9V199C&hword="&path=5 |
| 8ஆம் இலக்க 1940ஆம் அண்டு விவசாய உற்பத்தி (தரம் பிரித்தல்/அடையாளமிடல்) கட்டளைச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y9V198C&hword="&path=5 |
| 29ஆம் இலக்க 1958 ஆம் ஆண்டு மிருகங்கள் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y17V570C&hword="&path=5 |
| 4ஆம் இலக்க 1978 ஆண்டு இலங்கை முதலீட்டுச் சபை சட்டம் ( கொழும்பு பெரும்பாக பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழு) | http://www.lawnet.lk//process.php?sat=1981Y9V218C&hword="&path=5 |
| 38ஆம் இலக்க 1964ஆம் ஆண்டு இலங்கை தராதரங்கள் பணியகச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y9V218C&hword="&path=5 |
| 9ஆம் இலக்க 1893ஆம் ஆண்டு கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y19V608C&hword="&path=5 |
| 15ஆம் இலக்க 1970ஆம் ஆண்டு இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1970Y0V0C15A&hword="&path=5 |
| 3ஆம் இலக்க 1984ஆம் ஆண்டு புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1984Y0V0C3A&hword="&path=5 |
| 57ஆம் இலக்க 1981ஆம் ஆண்டு கரையோர பாதுகாப்புச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y0V0C57A&hword="&path=5 |
| 46ஆம் இலக்க 1971ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y11V260C&hword="&path=5 |
| 17ஆம் இலக்க 1967ஆம் ஆண்டு தேங்காய் சார் சட்டம் | http://www.lawnet.lk/process.php?st=1981Y9V218C&hword="&path=5 |


CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

**மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு**
**86, றொஸ்மிட் பிளேஸ்**
**கொழும்பு-07**

தொலைபேசி :- +9411 4 610943/4

மின்னஞ்சல் –feedback@cha.lk

இணையம் :- www.humanitarian-srilanka.org